// மிக மிக முக்கியம் //

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 06
முன்னிலை : திருமதி.ந.லதா,

ந.க.எண். 030153/அ3/இ1/2026 நாள். 18.09.2026

.... ....

பொருள் : பள்ளிக்கல்வி – அலுவலகப் பணியாளர்கள் – 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே அலுவலகத்தில் / பதவியில் பணிபுரிபவர்களுக்கு கட்டாய மாறுதல், விருப்ப மாறுதல் பதவி உயர்வு மற்றும் பணிமாறுதல் கலந்தாய்வு EMIS இணையதளத்தில் நடத்துவது – அலுவலக பணியாளர்களின் விவரங்களை அடங்கிய பதிவுகள் முழுமையான இல்லாதது – புதிய பதிவுகளை உள்ளீடு, பதிவுகள் மாற்றம் மற்றும் திருத்தம் செய்வது தொடர்பான அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை :
1. அரசாணை எண். 151 பள்ளிக்கல்வி (SE1 (1) துறை நாள். 09.09.2022
2. அரசாணை எண். 149 பள்ளிக்கல்வி (SE5 (1) துறை நாள். 01.07.2024

.......

பார்வை (2) இல் காணும் அரசாணையில் வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி, மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே பதவியில் / ஒரே பணியிடத்தில் பணிபுரிந்துவரும் அலுவலகப் பணியாளர்களுக்கு கட்டாய மாறுதலும், அதனைத் தொடர்ந்து தகுதியுள்ள விண்ணப்பங்களின் அடிப்படையில் விருப்ப மாறுதல், மாவட்ட மாறுதல், பதவி உயர்வு மற்றும் பணிமாறுதல் ஆகியவை Google Meet வழியாக நடத்தப்பட்டுவந்தது.

தற்போது அனைத்து அலுவலகப் பணியாளர்களுக்கான கட்டாய மாறுதல், விருப்ப மாறுதல், மாவட்ட மாறுதல், பதவி உயர்வு மற்றும் பணிமாறுதல் ஆகிய அனைத்தும் EMIS இணையதளம் மூலமாக நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அலுவலகப் பணியாளர்களின் விவரங்களை EMIS இணையதளத்தில் ஆய்வு செய்ததில் தற்போது பணிபுரிந்துவரும் பதவி வாரியான அலுவலகப் பணியாளர்களின் எண்ணிக்கைக்கும், EMIS இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பதவி வாரியான அலுவலக பணியாளர்களின் எண்ணிக்கைக்கும் அதிகஅளவில் (Shortfall entries) வேறுபாடுகள் உள்ளது.

எனவே, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றி, EMIS இணையதளத்தில் பணியாளர்களின் விவரங்கள் அடங்கிய பதிவுகள் உள்ளதா என்பதை தெரிந்துகொள்ளவும், பணியாளர் சார்ந்த பதிவுகள் EMIS இணைய தளத்தில் இல்லையெனில் புதிய உள்ளீடுகள் (Fresh Entries) பதிவுசெய்தல், ஏற்கனவே பணியாற்றிய அலுவலகத்திலிருந்து தற்போது பணிபுரியும் அலுவலகத்திற்கு பணியாளர் சார்ந்த பதிவுகளை மாற்றம் செய்யாத நிகழ்வில்

அதனை மாற்றம் செய்தல், ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள உள்ளீடுகளில் சரியான திருத்தங்களை மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் மேற்கொள்வது மிக மிக அவசியமாகிறது.

இனிவரும் காலங்களில் அலுவலகப் பணியாளர்களின் மாறுதல், பதவி உயர்வு, பணிமாறுதல் கலந்தாய்வுகள் EMIS இணையதளம் வாயிலாகவே நடத்தப்படும் என்பதால் இப்பணியில் கூர்ந்து கவனம் செலுத்தி மேற்காண் பணிகளை 25.09.2026 க்குள் செய்து முடிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், தங்களது மாவட்டத்தில் பணிபுரியும் மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் முதல் இரவுக் காவலர் வரையிலான பணியாளர்கள் எண்ணிக்கையினையினையும், EMIS இணைய தளத்தில் பதிவுகள் அடங்கிய எண்ணிக்கையும் சரியாக உள்ளதா என்பதை ஒத்திசைவு செய்து அதற்கான அறிக்கை 25.09.2026 க்குள் இவ்வியக்ககம் அனுப்பிவைக்குமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இணைப்பு : உரிய வழிமுறைகள்.

B. ok

பள்ளிக் கல்வி இயக்குநர்.

18.9.2026

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
(மின்னஞ்சல் வழியாக)

நகல் :

1. மாநில திட்ட இயக்குநர் , ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை 6
2. உறுப்பினர், ஆசிரியர் தேர்வு வாரியம்,சென்னை 6.
3. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம்,சென்னை 6
4. இயக்குநர், தனியார் பள்ளிகள்இயக்ககம்,சென்னை 6
5. இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை 6
6. இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை 6
7. முதன்மை உடற்கல்வி ஆய்வாளர், முதன்மை உடற்கல்விஆய்வாளர்அலுவலகம், சென்னை 6

(1–7) தங்கள் இயக்கக அலுவலகப் பணியாளர்கள் சார்பனை தகவல்களை EMIS இணைய தளத்தில் பதிவுகளை செய்யும் பொருட்டு.

8. இவ்வியக்கக அ2, அ4, அ5 பிரிவிற்கு
9. தகவல் பலகைக்கு